# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1902/44- 2015 පෙබරවාරි මස 19 වැනි බ්‍රහස්පතින්දා - 2015.02.19

1902/44 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 19 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இலக்கம்: மஹ/இ/அத்/332.

மக்களின் தேவைக்காக வேண்டி பின்வரும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மேல்மாகாணம், கொழும்பு மாவட்டம், மகரகம பிரதேச செயலாளர் பிரிவின், உடஹமுள்ள கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளரினால் வடிவமைக்கப் பட்டுள்ள இலக்கம் 9479 இல் காணப்படும் ஹெக்டயார் 0.1359 கொண்ட காணி.

**துண்டு இல. 01**

காணியின் பெயர்: தெல்ஹவத்தை (தளபத்பிடிய வீதி, வரி இல. 87/3 ஐ கொண்டகாணி); விபரம்: வீட்டுத் தோட்டம், நிரந்தரக் கட்டிடம், நிரந்தரக்கிணறு, மலசல கூடக்குழி, 20 வயதுடைய பலாமரமும் மாமரமும், 12வயதுள்ள வெரளு மரமும் 8 வயதளவுள்ள அம்பரல்லா மரமும்; உரிமை கோருநர்: S. M. K ரணசிங்ஹ 45/3, சந்திராலோக மாவத்தை கனத்த வீதி, உடஹமுள்ள, நுகேகொட; விஸ்தீரணம்: 0.0229 ஹெக்டயார்.

**துண்டு இல. 02**

காணியின் பெயர்: தெல்ஹவத்தை; விபரம்: வீட்டுத் தோட்டம், நிரந்தரக் கட்டிடம், நிரந்தரக் கட்டிடத்தின் ஒருபகுதி, 14 வயது மட்டிலான செவ்விளநீர் மரம், 20 வயது மட்டிலான தென்னைமரம்: உரிமை கோருநர்: கமலா பியசீலி, இல. 241, பழையவீதி, முல்லேரியா வடக்கு. அங்கொன்ட; விஸ்தீரணம்: 0.0191 ஹெக்டயார்.

**துண்டு இல. 03**

காணியின் பெயர்: தெல்ஹவத்தை (தளபத்பிடிய வீதி, வரி இல. 87ஐ கொண்டகாணி); விபரம்: வீட்டுத்தோட்டம், நிரந்தரக் கட்டிடத்தின் ஒருபகுதி, நிரந்தர கிணறு; உரிமை கோருநர்: P. W. A. D. கிரேஸ்லின் இல. 87 தளபத்பிட்டிய பாதை உடஹமுள்ள, நுகேகொட; விஸ்தீரணம்: 0.0220 ஹெக்டயார்.

**துண்டு இல. 04**

காணியின் பெயர்: தெல்ஹவத்தை (தளபக்பிட்டிய வீதி, ஆதனவரி இல. 87ஐ கொண்ட காணி); விபரம்: நுழைவு மார்க்கமாக; உரிமை கோருநர்: S. M. K. ரணசிங்ஹ இல. 45/3, சந்திராலோக்க மாவத்தை, கனத்த வீதி, உடஹமுள்ள, நுகேகொட சேனாதிராகே டொன்ரஞ்சித் 87/2; விஸ்தீரணம்: 0.0111 ஹெக்டயார்.

**துண்டு இல. 05**

காணியின் பெயர்: தெல்ஹவத்தை; விபரம்: வீட்டுத் தோட்டம், நிரந்தரகிணறு, 15 வயதுடைய ஈரப்பலாமரம்; உரிமைகோருநர்: நாமலி சேனாதீர முகவரி தேட முடியாது; விஸ்தீரணம்: 0.0207 ஹெக்டயார்.

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**துண்டு இல. 06**

காணியின் பெயர்: தெல்ஹவத்தை; விபரம்: வீட்டுத் தோட்டம், மலசலகூடக்குழி, மலசலகூடக்குழியின் ஒரு பகுதி, 15 வயதுடைய ஈரப்பலாமரம்; உரிமை கோருநர்: தீபிகா விக்கரமதுங்க கரன்கடிய, ரக்வான; விஸ்தீரணம்: 0.0186 ஹெக்டயார்.

**துண்டு இல. 07**

காணியின் பெயர்: தெல்ஹவத்தை (தளபத்பிட்டிய வீதி, வரி இல. 87/2ஐ கொண்டகாணி); விபரம்: வீட்டுத் தோட்டம், நிரந்தரக் கட்டிடம், தற்காலிக கட்டிடம், மலசல கூடக்குழி, மலசலகூடக்குழியின் ஒரு பகுதி, 14 வயதுடைய செவ்விளநீர் மரம், 12 வயது மதிக்கத்தக்க புளிய மரம்; உரிமை கோருநர்: சேனாதீராகே டொன் ரஞ்சித் 87/2 தளபத்பிடிய வீதி, உடஹமுள்ள, நுகேகொட; விஸ்தீரணம்: 0.0215 ஹெக்டயார்.

மேற்கூறப்பட்டுள்ள காணிக்கு உரிமை கோருவதற்காக யாரும் இருப்பின் சம்பந்தப்பட்ட உரித்துரிமையுடையோர் அத்தாட்சிப்படுத்தக்கூடிய ஆவணங்களுடன் 2015, மாச்சு 11 ஆம் திகதிக்கு முன்பு மகரகமை பிரதேச செயலகத்திற்குச் சமுகமளித்து என்னை நேரில் சந்திக்கவும்.

2015, மாச்சு 04 ஆம் திகதிக்கு முன்பு இக்காணி சம்பந்தமாக, சம்பந்தப்பட்டவர்களின் தன்மையில் அவர்களின் உரிமைக்கான காணியை பெறுவது பற்றிய இழப்பீடு அல்லது அது பற்றிய காரணத்தையும் இழப்பீட்டுத்தொகை எவ்வகையில் கணிப்பீடு செய்யப்பட்டது என்பது பற்றியும் இரண்டு பிரதிகளில் அறிவிக்கப்பட வேண்டும். உரிமை உறுதிப்படுத்தப்பட வேண்டுமாதலால் காணியின் உறுதிப் பத்திரம், வரைபடம் அதனுடன் தொடர்புபட்ட ஆவணங்களுடன் என்னை நேரில் சந்தித்து சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

புத்திதரங்கா கருணாரத்தின,
பிரதேச செயலாளர்,
மகரகமை.

பிரதேச செயலகம்,
மகரகமை.

3-131

## திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இலக்கம்: வ/18/56/2001/II.

2009 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 23 ஆந் திகதிய 1629/7 ஆம் இலக்கம் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிஷேச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட ஆரம்ப வரைபட இல. கம். 3718 இல் துண்டு இல. 96 இன் துண்டு இல. 178 மற்றும் 179 என கீழ்வருமாறு திருத்தம் செய்யப்பட்டுள்ளதென இத்தல்அறியத்தருகிறேன்.

**துண்டு இல. 178**

காணியின் பெயர்: கொரககஹவத்த; விபரம்: வீட்டுத் தோட்டம்; உரிமை கோருநர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: ஜே. ஏ. பிரியங்க, இல. 128/1, தபோவனரான வீதி மத்துமகல, ராகம; விஸ்தீரணம்: 0.0005 ஹெக்டயார்.

**துண்டு இல. 179**

காணியின் பெயர்: கொரககஹவத்த; விபரம்: வீட்டுத் தோட்டம், நிரந்தரக் கட்டிடத்தின் பகுதி காணப் படுகின்றது; உரிமை கோருநர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: ஹெட்டிஆரச்சிகே குசுமாவதி, இல. 128/1, தபோவனரான வீதி மத்துமகல, ராகம; விஸ்தீரணம்: 0.0009 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப் பட்ட காரியக்காரர் மூலமாக துண்டு இல. 172 தொடக்கம் 173 வரையான காணிகளுக்கு 2015 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 18 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு வத்தளை பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மை யையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங் களையும் 2015 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 18 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

டபிள்யு. ஜீ. பிரேமலால்,
பிரதேச செயலாளர்,
வத்தளை.

பிரதேச செயலகம்,
வத்தளை,
2015, பெப்புருவரி 16.

3-132

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.